DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 41/2025
Miscellaneous :
Sessions : PW 7
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| Name | அமுதா |
|---|---|
| Father / Husband Name | கண்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **16.02.2026**

**முதல் விசாரணை:**

1.)நான் தற்போது செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் 2021 ல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது தலைமைக் காவலர் 1319 திரு. மோகன் என்பவர் கோகிலா என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 448/2021 இதச பிரிவுகள் 341 294 (பி) 323 506(1) IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார். **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் மேற்படி மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு நான் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஸ்டாலின் ராஜ் மற்றும் ரகுவரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அசாஆ 5 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடிவந்த நிலையில் மாண்புமிகு செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் எதிரியை கைது செய்யவில்லை. இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது 341 294 (பி) 323 506(1) IPC பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

**3.** இந்த வழக்கில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யவில்லை என்றாலும் உதவி ஆய்வாளர் பதவியில் இருந்து எவரும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எப்போது வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 07.12.2021 ம் தேதி 15.30 மணியாகும். பொதுவாக முதல் தகவல் அறிக்கை தலைமைக் காவலர் பதிவு செய்யக்கூடாது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு ஏன் 04.01.2022 ம் தேதி அனுப்பப்பட்டுள்ளது என்றால் நிதிமன்ற காவலர் தான்

காலதாமதமாக கொடுத்துள்ளார். அசா1 கோகிலா கொடுத்த புகார் மனுவில் புகார் கொடுத்த தேதியின் கீழ் 11.10 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தலைமைக் காவலர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் 12 வது காலத்தில் 14.45 மணிக்கு நிலையம் ஆஜராகி கோகிலா என்பவர் புகார் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவருக்கு தான் தெரியும். நான் சம்பவயிடம் எப்போது சென்றேன் என்றால் 15.30 மணிக்கு சென்றேன். பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை எப்போது எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 15.00 மணி ஆகும். மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ள வீட்டினர் எவரையும் இவ்வழக்கில் பட்டியல் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

4. நான் சம்பவயிடம் சென்று செங்கல் மற்றும் பச்சையப்பன் கிழிந்ததாக சொல்லப்படும் சட்டையை கைப்பற்றவில்லை என்றால் செங்கல் உடைந்து மணலாக இருந்ததால் கைப்பற்றவில்லை. மேற்படி சம்பவயிடத்தில் பச்சையப்பனின் கீழிந்த சட்டை இல்லை. சம்பவயிடத்திற்கும் புகார்தாரர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 அடி தூரம் இருக்கும். சம்பவயிடத்திற்கும் எதிரியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 அடி தூரம் இருக்கும். இவ்வழக்கின் எதிர் வழக்கின் குற்ற எண் என்னவெறால் 447/2021 ஆகும். முதலில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்காமல் பிறகு பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைக்காக சம்பவயிடம் சென்றதற்கான காரணம் என்னவென்றால் சம்பவயிடம் சென்று இரண்டு வழக்குகளையும் விசாரித்தேன். குற்ற எண் 447/2021 முதல் தகவல் அறிக்கை எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 448/2021 பதிவு செய்யப்பட்ட நாளில் 14.45 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. இரண்டு குற்ற எண்ணும் ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒரே நேரத்தில் இரண்டு குற்ற எண்ணிற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இயலாது என்பதால் மேற்படி குற்ற எண் 448/2021 ஐ பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து மேற்படி வழக்கில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக அறிவிப்பு ஏதேனும் எங்களுக்கு வந்ததா என்றால் இல்லை. சம்பவத்தில் 1 1/2 வயது குழந்தைக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் லட்சுமி என்பவரும் அவரது மருகனும் மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளதால் மேற்படி அவரது மருமகனும் இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்படவில்லை என்றால் அவர் சம்பவத்தில் ஈடுபடவில்லை.

5. பார்வை மகசர் சாட்சிகளிடம் 15.50 மணிக்கு கையொப்பம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி பார்வை மகசரை நான் கையால் எழுதி சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன் என்றால் சரிதான். என்னுடயை புலன் விசாரணையில் எதிரிக்கும் புகார்தாரருக்கும் நிலம் சம்மந்தமான அளவீடுகளால் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். மேற்படி எதிரி மீது ஏற்கனவே தொடரப்பட்டுள்ள வழக்கின் குற்ற எண்களை என்னால் சொல்ல முடியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. புகார் கொடுத்த சமயத்தில் நான் காவல் நிலையத்தில் இருந்தும் நான் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் தலைமைக் காவலர் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சாட்சிகளை விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து எதிரி மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**